# CHAPTER – 36

# சங்க காலத்தில் ஓவிய கலையின் வளர்ச்சியும் அறிவியல் தொழில் நுட்பமும் ஓர் ஆய்வு

**முனைவர் முத்துகுமரன்**
துறைத்தலைவர் – வரலாற்றுத்துறை.
NGM கலை(ம) அறிவியல் கல்லூரி, பொள்ளாச்சி,

**ப. பெருமாள்**
ஆய்வியல் நிறைஞர்,
ஆராய்ச்சி & முதுகலை வரலாற்றுத்துறை,
அரசு கலைக்கல்லூரி, தருமபுரி

நமது நாட்டு ஓவியக் கலையை ஆராய்வோம். ஓவியத்துக்குச் சித்திரம் என்று பெயர் உண்டு. நேர்கோடு, வளைந்த கோடு, கோணக்கோடு முதலிய கோடுகளினாலும், சிவப்பு, கறுப்பு, மஞ்சள், நீலம் முதலிய நிறங்களினாலும் ஓவியங்கள் எழுதப்படுகின்றன.

**ஓவியக்கலையின் பழைமை**

சங்க காலத்திலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, ஓவியக்கலை நமது நாட்டில் வளர்ச்சியடைந்திருந்தது என்பதற்க்கு சங்க நூல்களிலே சான்றுகள் உள்ளன. நமது நாட்டு ஓவிங்கள் பெரும்பாலும் சுவர் ஓவியங்களே. அதாவது சுவரிலே எழுதப்பட்ட ஓவியங்கள். சிறுபான்மை மரப்பலகைகளிலும், கிழி(துணிச் சீலை Canvas)களிலும் எழுதப்பட்டன. படம் என்று இப்போது வழங்குகிற தமிழ்ச்சொல், ஆதிகாலத்தில் துணியில் சித்திரம் எழுதப்பட்டதைத் தெரிவிக்கின்றது. படம் அல்லது படாம் என்பது சித்தம் எழுதப்பட்ட துணிச்சீலை என்னும் பொருள் உடையது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, நமது நாட்டு ஓவியக்கலை செழுமையும், முழுமையும் பெற்று விளங்கியதற்குச் சங்க நூல்கள் சான்று பகர்கின்றன. நமது நாட்டு ஓவியங்கள் பெரும்பாலும் சுவர் ஓவியங்களே. சிறுபான்மை மரங்களிலும் துணியிலும் எழுதப்பட்டன.[1] தமிழ்நாட்டு அரசர்களின் அரண்மனை தோறும் சித்திரமாடம் என்னும் கட்டடம் தனியே அமைந்திருந்தது. பல்லவர், சோழர் கால ஓவியங்கள் எங்கெங்கே சிறந்திருந்தன என்பது குறித்து மயிலையார் கீழ் வருமாறு கூறுகிறார்.

“காஞ்சிபுரத்துக் கயிலாசநாதர் கோயிலிலும், விழுப்புரம் தாலுக்காவில் பனைமலைக் கோயிலும், கைசாலாப் பெருவுடையார் கோயிலிலும், பல்லவர் காலத்து சித்திரமும், சோழர் காலத்துச் சித்திரமும் சுவர்களில் காணப்படுகின்றன. புதுக்கோட்டையைச் சேர்ந்த சித்தன்ன வாசல் குகைக் கோயிலிலும், திருநெல்வேலி திருமலை புரத்துக் குகை கோயிலிலும், பல்லவர் காலத்து ஒவியமும் பாண்டியர் காலத்து ஓவியமும் காணப்படுகின்றன.”[2] இவ்வோவியங்கள்

ஒவ்வொன்றின் சிறப்புகளையும், ஓவிய நுட்பங்களையும் மயிலையார் விரிவாகவும், சுவையாகவும் விளக்குகின்றார். தந்சை மதுரை ஆகிய இடங்களில் நாயக்க மன்னர்களும் சுவர் ஓவியங்களை அமைந்திருக்கிறார்கள். ஓவியத்தைப் பற்றிய பல செய்திகள், சிந்தாமணி, பெருங்கதை, மணிமேகலை போன்ற காவியங்களில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. சங்க காலத்தில் ஓவியக் கலையைப் பற்றி விளக்கும் ''ஓவிய நூல்'' ஒன்று இருந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது.[3]

**சுவர் ஓவியம்**

பண்டைக் காலத்தில் அரசருடைய அரண்மனை, பிரபுக்களின் மாளிகை, கோயில், மண்டபம் முதலிய கட்டடங்களின் சுவர்களில் ஓவியங்களை எழுதி அழகுப்படுத்தினார்கள். சுவர் ஓவியங்கள் தான் பண்டைக்காலத்தில் பெரிதும் பயின்று வந்தன. பாண்டியனின் சித்திர மாடத்தை மாங்குடி மருதனார் என்னும் புலவர்,

**''காயங்ககண்ட வயங்குடை நகரத்துச் செம்பியன் றன்ன செஞ்சுவர்**
**புனைந்து''**

என்று கூறுகிறார், (மதுரைக்காஞ்சி 484–5).

''குளிர்ச்சியாற் கயத்தைக் கண்டாற் போன்ற விளங்குதலையுடைய கோயிலிடத்து (அரண்மனையில்) செம்பாற் செய்தால் ஒத்த செவ்விய சுவர்களைச் சித்திரம் எழுதி'' என்று இதற்கு நச்சினார்க்கினியர் உரை எழுதுகிறார். நக்கீரர் பாடிய நெடுநல்வாடையிலும் பாண்டியனுடைய சித்திரமாடம் கூறப்படுகிறது.

**''வெள்ளி யன்ன விளங்கும் சுதையுரீஇ மணிகண் டன்ன மாத்திரத்**
**டிண்காழ்ச் செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர் உருவப் பல்பூ**
**வொரு கொடி வளைஇக் கருவொடு பெரிய காண்பின் நல்லில்''**

என்று அவர் சித்திர மாடத்தை வர்ணிக்கிறார். ''வெள்ளியை யொத்து விளங்குகின்ற சாந்தை வாரி, நீல மணியைக் கண்டாற் போன்ற கருமையினையும் திரத்சினையும் உடைய திண்ணிய தூண்களையுடையவாய், செம்பினாலே பண்ணினாலொத்த தொழில்கள் செய்தலுற்ற நெடிய சுவரிலே வடிவழகினையுடைத்தாகிய பல பூக்களையுடைய வல்லி சாதியாகிய ஒப்பில்லாத கொடியை யெழுதி புதைத்த கருவோடே பெயர் பெற்ற காட்சிக்கினிய நன்றாகிய இல்'' என்று இதற்கு நச்சினார்க்கினியர் உரை எழுதுகிறார்.

**பரங்குன்றத்துச் சுவர் ஓவியம்**

மதுரைக்கு அருகில் உள்ள திருப்பரங்குன்றத்து மலையிலே முருகப்பெருமான் கோயிலைச் சார்ந்து ஒரு சித்திர மாடம் இருந்தது என்று குன்றாம்பூதனார் என்னும் புலவர் கூறுகிறார்.

**''நின் குன்றத்து எழுதெழில் அம்பலங் காமவேள் அம்பின்**
**தொழில் வீற்றிருந்த நகர்''** – (பரிபாடல் 18: 27–29)

''நின் குன்றத்தின்கன் எழுதிய அழகையுடைய அம்பலம் அம்பினது ஏத்தொழில் நிலைபெற்ற காமவேள் சிரமச் சாலையை (ஆயுதப் பயிற்சி செய்யுமிடம்) யொக்கும்'' என்பது பரிமேலழகர் உரை.

இந்தச் சித்திர மாடத்தில் எழுதப்படிருந்த சில ஓவியங்களை நட்பண்ணனார் என்னும் புலவர் சற்று விளக்கிக் கூறுகிறார். முருகப் பெருமானை வணங்கிய பிறகு மக்கள் இந்தச் சித்திர

மண்படத்தில் சென்று அங்குள்ள ஓவியக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தார்கள் என்றும், அங்கு எழுதப்பட்டிருந்த சித்திரங்களில் காமன், இரதி, அகலிகை, அவளிடம் சென்ற இந்திரன், கௌதம முனிவன், அவனைக் கண்ட இந்திரன் பூனையுருவங்கொண்டோடியது முதலிய ஓவியங்கள் எழுதப்பட்டிந்தன என்றும், இச்சித்திரங்கள் கண்டவர் இது என்ன'' "இது என்ன என்று அறிந்தவர்களைக் கேட்க அவர்கள் இது இன்னின்ன சித்திரம் என்று விளக்கிக் கூறினார்கள் என்றும் நப்பண்ணனார் கூறுகிறார்.

**"இரதி காமன் இவள் இவன் எனாஅ விரகியர் வினவ வினாவிறுப்**
**போரும் இந்திரன் பூசை இவள்கலிகை இவன் சென்ற கவுதமன்**
**சினறைக் கல்லுரு ஒன்றிய படியிதென் றுரைசெய் வோரும்**
**இன்ன பலபல வெழுத்து நிலை மண்டபம்'' (பரிபாடல் 19:48–53)**

திருச்சி ஜில்லா திருச்சி தாலுக்காவில் உள்ள திருவெறும்பூர் கோயிலைச் சார்ந்து சித்திரக்கூடம் என்றும் மண்டபம் பண்டைக்காலத்தில் இருந்த செய்தியைச் சாசனங்கள் தெரிவிக்கின்றன. (S.I.I. Vol. XIII.N0.8, 1852, 138, 139)

**ஓவிய நூல்**

மாதவி என்னும் நாடகமகள் பல கலைகளைக் கற்றவள் என்றும், அவற்றில் ஓவியக் கலைகளையும் பயின்றாள் என்றும் மணிமேகலை நூல் கூறுகிறது.

**"ஓவியச் செந்நூல் உரைநூற் கிடைக்கையும்**
**கற்றுத் துறை போகிய பொற்றொடி மங்கை'' (ஊர் அலர்:31–32)**

அடியார்க்கு நல்லார் காலத்திலும் ஓவிய நூல் இருந்து. அடியார்க்கு. நல்லார் ஓவிய நூலைக் குறிப்பிடுகிறதோடு அந்நூலிலிருந்து ஒரு சூத்திரத்தையும் மேற்கொள்கோள் காட்டுகிறார்.

திரிதரவுடையனவும் திரதவில்லனவுமென இரு பகுதி அவற்றுள் திரிதரவுடையன யானை –தேர்புரவி (?) பூனை முதலியன. திரிதர வில்லன ஒன்பது வகைப்படும், அவை, பதுமுகம், உற்கட்டிதம், ஒப்படியிரக்கை, சம்புடம், அயமுகம், சுவத்திகம், தனிப்புடம், மண்டிலம், ஏகபாதம் எனவிவை. என்னை ?

**"பதுமுக முற்கட் டிதமே யொப்படி யிருக்கை சம்புட மயமகஞ்**
**சுவத்திகந் தனிப்புட மண்டில மேகபாத முளப்பட வொன்பது**
**மாகுந் தரிதர வில்லா விருக்கை யென்ப'''**

என்றாராகலான்'' (சிலம்பு வேனிற்காதை, 23–26–ஆம் அடிகளின் உரை மேற்கோள்). இவ்விதம் சங்க காலத்தில் ஓவியக்கலை சிறப்புடன் விளங்கியது.

**அடிக்குறிப்புகள்**

- அகநானூறு (சங்க இலக்கியம்) சைவசித்தாந்த சமாஜப் பதிப்பு,
- ஆயிரந்திர மதத்தமிழுரை – அ. கிருஷ்ணசாமி பிள்ளை.
- சமணமும் தமிழும் – மயிலை சீனிவேங்கடசாமி.

- நற்றிணை – பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் பதிப்பு
- பரத சங்கிரகம் – அண்ணாமலை பல்கலைக்கழக பதிப்பு
- மதுரை காஞ்சி – மாங்குடி மருதனார் ( பத்துப்பாட்டு)
- நெடுநல் வாடை – நக்கீரர்
- பரிபாடல் – டாக்டர் உ.வே. சாமிநாதையர் பதிப்பு
- மதங்க சூளாமணி – விபுலானந்த சுவாமிகள்
- பரிபாடல் – உ.வே.சாமிநாதையர் பதிப்பு
- மணிமேகலை – கூலவாணிகன் சாத்தனார்
- சீவகசிந்தாமணி – திருத்தக்க தேவர்